## கனிமொழி கருணாநிதி அறிவுக்கொடியை உயர்த்தினார்;

# நிர்மலா சீதாராமன் அறியாமையை வெளிப்படுத்தினார்!

‘தமிழர்களை அநாகரிகமானவர்கள்’ என்று கடந்த 10 ஆம் தேதி மக்களவையில் ஒன்றிய அரசின் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேச்சினூடே குறிப்பிட்டார். உடனே தனது போர்க்குரலை உயர்த்தி எதிர்ப்பை வெளிப்படுத்தினார் கனிமொழி கருணாநிதி. இதனால் நாடாளுமன்றத்தில் 100 முறை வேண்டுமானாலும் மன்னிப்புக் கோருகிறேன் எனப் பேசினார் பிரதான். இந்த விவகாரத்தில் ‘வித்துவாமிசினி’ ‘ஆரியமாலா’ நிர்மலா சீதாராமனால் சும்மா இருக்கமுடியுமா? திருவாய் மொழியைப் பொழிந்தார்.

மக்களவையில் பெரியாரைத் தாக்கிப் பேசினார். அவர் பேசியதாகச் சில மேற்கோளை எடுத்து காட்டி இருக்கிறார். அவற்றையெல்லாம் வரிசைப் படுத்தி மீண்டும் நாம் இங்கே சொல்லவிரும்பவில்லை. கட்டுரையின் வேறு இடத்தில் சொல்வோம். ‘ஆரியமாலா’ நிர்மலாவின் நோக்கம் பெரியார் தமிழை–தமிழரைக் காட்டுமிராண்டிகள் என்று சொல்லி இருக்கிறார். அதைப் போல தர்மேந்திர பிரதான் தமிழர்களை ‘நாகரிகமற்றவர்கள்’ என்று கூறுகிறார். பெரியாரை வழிபடுகிறீர்கள். பிரதானை எதிர்க்கிறீர்கள் என்பது ஆரியமாலாவின் கருத்து; வாதம்.

பெரியார் தமிழர்களை கூறியதன் நோக்கம், என்ன? தர்மேந்திர பிரதான் ஆதிக்க வசப்பட்டு கோபத்தோடு சொல்வதன் நோக்கம் என்ன? இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறது.

பெரியார் கூறியதன் நோக்கம் தமிழர்களை உலக மாந்தர்களாக ஆக்க வேண்டும். அறிவுள்ளவர்களாக தன்மானம் உள்ளவர்களாக மாற்ற வேண்டும். தமிழ்மொழி அதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். தமிழும் தமிழர்களும் அதற்கேற்ப வளர வேண்டும் என்று கருதித்தான் சொன்னார்.

பிரதான் எதற்காகச் சொல்கிறார்? புதிய தேசியகல்விக் கொள்கையை ஏற்க வேண்டும் என்பதற்காக மன்னர் கால ஆணவத்தோடு தனக்கு அடங்கிய ‘இராஜ்ய பிரதிநிதிகளை’ப் பார்த்து ‘அநாகரிகமானவர்கள்’ என்று சொல்கிறார். இது இரண்டும் எப்படி ஒன்றாகும்?

இது ‘வித்வாமிசினி’ ‘ஆரியமாலா’ நிர்மலா சீதாராமனுக்குத் தெரியாதா? தெரியும்.

பிரதான் மாட்டிக் கொண்டார். அவையிலேயே பேச்சைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். மன்னிப்பையும் கோரினார்.

இந்தியாவை ஆரிய வர்த்தமாக்க முனைய வந்தவருக்கு துணை நிற்கும் ‘ஆரியமாலா’ நிர்மலா சீதாராமன் பெரியாரின் தமிழ், தமிழர் பற்றிய கருத்துகளை எடுத்து வைத்து குழப்பம் செய்கிறார். அதற்கு 1967 ஆம் ஆண்டு இந்து ஆங்கில இதழைச் சான்று காட்டுகிறார்.

அதில் தெ.பொ.மீ.யின் எதிர்ப்பைச் சொல்லுகிறார். தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்டை நடத்தியவர். அவர் பெரியாரை ஆதரிப்பவரா? திராவிடஇயக்க எதிர்ப்பாளர் ஆயிற்றே. அவர் பெரியாரின் கருத்தை எதிர்க்காமல் எப்படி இருப்பார்?

தனி நாயகம் அடிகள் பெரியாரின் கருத்தைச் சொந்தக் கருத்து என்று சொல்கிறாரே தவிர அந்தக் கருத்துப் பற்றி ஆய்வுரை செய்து எந்த மதிப்பீட்டையும் வழங்கவில்லை.

அறிஞர் அண்ணாவின் கருத்தாகச் சொல்லப்பட்டு உள்ளதில் பெரியாரின் உள்ளீடு தெரிகிறது. அவ்வளவே. நிர்மலாவின் சான்று நிற்கவில்லையே.

பெரியார் சுதந்திரச் சிந்தனையாளர். அவர் என்ன?–கத்துக்குட்டி அண்ணாமலையா? அவர் ஏற்றுக் கொண்ட கொள்கைகளுக்காக உண்மையாக இருந்தவர். உழைத்தவர்.

நிர்மலாக்களின் தாத்தாக்களைச் சந்தித்தவர். பெரியாரைப் பற்றி மோடி பேசவில்லை. அமித்ஷா பேசவில்லை. தென்னகத்தில் பிறந்த ‘ஆரியமாலா’ பேசுகிறார். ஆரிய மறைகளுக்கு உரை பிறந்த இடம் தென்னகம்! சாயணர் உரை வரைந்தார். அந்த நீட்சி தானே நிர்மலா சீதாராமன்!

ஆகவே நிர்மலா எடுத்துக் கொடுத்து காப்பாற்ற முன் வருகிறார். பெரியாரின் கருத்தை மேலோட்டமாகப் பார்த்தால் தமிழ், தமிழர்கள் எதிர்ப்பை அவர் வெளிப்படுத்துவது போல்தான் தோன்றும். ஆனால் அது அத்தகையது அல்ல என்று கனிமொழி ‘ஆரியமாலா’ நிர்மலாவுக்கு பதில் அளித்து இருக்கிறார்.

கனிமொழி கருணாநிதி திராவிட இயக்கத்தின் நீலகேசி. மிக அழகாக பதில் சொல்லி இருக்கிறார். ஒரு சூத்திரத்தைப் போல்– நூற்பாவைப் போல் பதில் சொல்லி இருக்கிறார். அவர் கூறிய பதிலில் பெரியாரின் உள்ளொளித் தெரிகிறது. அது வருமாறு:–

**“பெரியார் எதற்காகச் சொன்னார் என்பதை அம்மையார் நிர்மலா சிதாராமன் புரிந்து கொள்ள வேண்டும். அறிவியல் விஷயங்கள் உலகம் முழுவதும் பரவும் புதிய விஷயங்கள் தமிழக மாணவர்களுக்கு வந்து சேர வேண்டும் என்பதற்காக பழம் பெருமை பேசிக் கொண்டு இருக்காதீர்கள். புதிய விஷயங்களைக் கொண்டு வாருங்கள் என்ற ரீதியில் பெரியார் பேசி இருக்கிறார். இதனை நிர்மலா சீதாராமன் புரிந்து கொள்ளவில்லை.**

“அவர் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் சொல்ல வேண்டுமானால். ‘மெல்லத் தமிழினி சாகும் என்று ஒரு பேதை உரைத்தான்’ என பாரதியார் கூறியது போன்ற அக்கறையை பெரியார் வெளிப்படுத்தினார்.

தந்தை பெரியார் பேசுவதற்கும் இன்னொரு மாநிலத்திலே இருக்கக் கூடிய ஓர் அமைச்சர் தமிழர்களைப் பார்த்து பேசுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். **அவமானப் படுத்துவதற்கும் அக்கறை கொள்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது.”**

பெரியாரின் சிந்தனை பாதிப்புக்கு ஆளானவர்களும் பாதிக்கப்பட்டவர்களும் சூத்திர, அவர்ணஸ்தர்களும் கேட்கிறபோதே, படிக்கிறபோதே கிளர்ச்சிக்குரியவர்களாக ஆகியிருக்கிறார்களே, அது ஏன்?

மதத்தால், மொழியால் ஒரு பழம் பெரும் இனம் சிக்குண்டு இருப்பதை அடையாளம் கண்டு தட்டி எழுப்பி **‘நெருப்பினில் தமிழ் செய்து நீசர் முன் வைத்தவர்’** பெரியார்.

பெரியார் தமிழர்களுக்காகச் சொன்னதை எடுத்து வைத்துக் கொண்டு நிர்மலாக்கள் ஏன் கொதிக்க வேண்டும்?

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெரியார் பேச்சை எழுத்தை முதன் முதலாக கேட்டும் படித்தும் உணர்ந்த போது அதிர்ந்து போனார். **‘எம்பெருமான் இமயமலையையே இல்லை என்கிறாரே’** என்று வியந்து இருக்கிறார். இதுவரை நாம் கேட்ட மலைப்போன்ற கருத்துகளை மறுக்கிறாரே என்கிறார்.

**க.திருநாவுக்கரசு**
**திராவிட இயக்க ஆய்வாளர்**



அறிஞர் அண்ணா அவர் பேச்சைக் கேட்டபோது ‘திகைக்க வைக்கிறாரே’, ‘திடுக்கிட வைக்கிறாரே’ என்று பேசினார். கல்லூரி காணாத அந்தக் கிழவரை தலைவராக நான் கண்டதும் கொண்டதும் அவர் ஒருவரைத் தான் என்று கூறினார்.

சூத்திரனாய், அவர்ணஸ்தர்களாய் ஆக்கப்பட்டவர்களுக்குத்தான் அந்த வலித் தெரியும். ‘வித்துவாமிசினி’ ‘ஆரியமாலா’ நிர்மலா சீதாராமனுக்கு எப்படித்தெரியும்.?

‘ஆரியமாலா’ நிர்மலாவின் பார்வைக்கு பெரியார் தமிழைப் பற்றிக் கூறிய அவரின் ஒரு சில கூற்றைப் பாருங்கள்.

**(1) நான் தமிழை எதற்காகக் குறை கூறுகிறேன் என்றால் அது மனிதன் காட்டுமிராண்டியாக இருந்த காலத்தில் ஏற்பட்ட மொழி. படிப்பறிவு இல்லாதவர்களால் ஏற்படுத்தபபட்ட மொழி. மனிதன் பண்படாமல் இருந்தபோது ஏற்பாடு செய்து கொண்ட மொழி என்பதோடு நம் வளர்சிக்கும் அதில் வழியில்லை; விஞ்ஞான முன்னேற்றத்திற்கு அதனால் பயனில்லை. மற்ற மொழிகளிலிருந்து மொழி பெயர்த்து அதன் மூலம் நாம் முன்னேறினால்தான் உண்டு என்கிற நிலையில் தமிழ் மொழி இருப்பதனாலேயே ஆகும்.” (விடுதலை 03.05.1971 )**

**(2) தமிழில் ஆரியம் புகுந்ததால்தான் காட்டுமிராண்டித் தனம் புகுந்துவிட்டது. இதில் பண்டிதர்கள் கவனம் செலுத்த வேண்டாமா? கவலை எடுத்துக் கொள்ள வேண்டாமா? வெளிநாட்டு மக்கள் எல்லாம் காட்டுமிரண்டிகளாக வாழ்ந்த காலத்தில் கப்பலோட்டி கடல் கடந்து வாணிபம் நடத்திய தமிழர்களின் மரபில் இன்று ஒரு நியூட்டன் தோன்றவில்லை. ஒரு எடிசன் தோன்றவில்லை. ஒரு மார்கோணி தோன்ற முடியவில்லையே என்பதை அறிந்து கொள்ள வேண்டாமா?” – விடுதலை (05.01.1968)**

**(3) “ஆங்கிலம் வளர்ந்த மொழி; விஞ்ஞான மொழி என்பதும் தமிழ் வளர்ச்சி அடையா பழங்கால மொழி என்பதும் என்னுடைய மதிப்பீடு ஆகும். இதை நான் சொன்னதற்கான முக்கிய நோக்கம் தமிழ்மொழி ஆங்கில மொழி அளவுக்கு விஞ்ஞான மொழியாகவும் பகுத்தறிவு மொழியாகவும் ஆகவில்லை என்பதுதானே தவிர தமிழ் மீது எனக்குத் தனிவெறுப்பு இல்லை.”**

பெரியாரின் கருத்தை புரட்சிக் கவிஞரின் கவிதையில் மொழியின் பழமையைக் கீழ்க்காணும் கவிதை வரிகளில் காணுகின்றோம்.

“திங்களொடும் செழும்பரிதி
தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும்
மங்குல் கடல் இவற்றோடும்
பிறந்த தமிழுடன் பிறந்தோம்”

இந்தக் கவிதையின் பொருளை பெரியார் தமது மொழியில் சொல்கிறார்.

இப்படிப்பட்ட கருத்துகளைப் பெரியார் சொன்னதற்குக் காரணம் அம் மொழிக்குரியவர்கள் அனைத்துத் துறையிலும் முன்னேற மொழி அனைத்து கலைகளையும் பெற்று உயரவேண்டும் என்பதே ஆகும். அறிஞர் அண்ணா பெரியாரின் இத்தகைய விமர்சனங்களை ‘பூனை தன் குட்டியைக் கவ்விக்கொண்டு செல்வது போல’ என்று குறிப்பிடுவார்.

தர்மேந்திர பிரதான் குறிப்பிட்ட அநாகரிகம் அத்தகைய தன்மையுடையது அல்ல. அதற்குச் சப்பைக் கட்டுக்கட்டும் ‘வித்துவாமிசினி’ நிர்மலா சீதாராமன் பெரியார் கருத்தை வேறுவித விளக்கம் கூறி குழப்பதை விதைக்கிறார்.

பிரதான் கூறியதுவேறு நோக்கமுடையது. பெரியார் கூறியது மொழி, இனம், நாடு முன்னேறும் நோக்கம் கொண்டது. ஆகவேதான் திராவிட இயக்கத்தின் நீலகேசியான கனிமொழி கருணாநிதி **‘அவமானப் படுத்தியதற்கும் அக்கறை கொள்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது’** என்று நறுக்குத் தெறித்தது போல் கூறி இருக்கிறார்.

ஆகவே இந்தச் சர்ச்சைகளின் மூலம்; கனிமொழி அறிவுக்கொடியை உயர்த்தினார். நிர்மலா சீதாராமன் அறியாமையை வெளிப்படுத்தினார்.

பா.ஜ.க.நாடு தழுவி திராவிட இயக்கத்தோடு ஒரு கருத்தியல் போர் நடத்தி வருகிறது. எதிர் கொள்வோம்; முன்னேறுவோம்.

●

# முதல்வர் பிறந்தநாள் விழா: தொல்.திருமாவளவன் பேச்சு!

3-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஏற்படுத்தியது திராவிட முன்னேற்றக் கழகம் – பேரறிஞர் அண்ணா – அவருடைய தளபதிகள் வழி நடத்திய படை. அதனால்தான், வரலாறு அவர்களைப் பேசுகிறது.

ஆனால், அவர் தமிழருக்கும் – தமிழ்நாட்டிற்கும் – தமிழ்த் தேசிய அரசியலுக்கும் எதிரானவர் என்பதைப் போன்று ஒரு தோற்றத்தை சிலர் உருவாக்குகிறார்கள்.

என்னுடைய 35 ஆண்டு கால பொது வாழ்வில், தமிழ்நாட்டு அரசியலில் ஒன்றை புரிந்து கொண்டேன். எந்த ஆதாரமும் இல்லாமல் கலைஞரை எதிர்ப்பதை மட்டுமே கொள்கையாகக் கொண்டு செயல்படக் கூடியவர்கள் இங்கே ஏராளம் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு எந்த கொள்கையும் கிடையாது. தி.மு.க. எதிர்ப்பு என்பதை விட, கலைஞர் எதிர்ப்பு என்பது தான் இங்கே முக்கியமான அரசியலாக இருக்கிறது. இதை நான் மேடைக்காக பேசவில்லை. நான் உணர்ந்து பேசுகிறேன். அவர் மீது அப்படி ஒரு வெறுப்பு; அப்படி ஒரு எதிர்ப்பு. எல்லாவற்றையும் தாண்டி நிமிர்ந்து நின்றவர்; ஐந்து முறை இந்த நாட்டின் முதலமைச்சராக நாற்காலியில் அமர்ந்தவர்.

**குமரியில் வள்ளுவர் சிலை!**
**கலைஞரின் சாதுர்யம்!**

முத்தமிழறிஞர் கலைஞர் எவ்வளவு சாதுரியமானவர்... விவேகானந்தர் பாறை என்று கன்னியாகுமரியில் இருக்கிற பாறையை சனாதன சக்திகள் எல்லாம் சொல்லி பெருமைப்பட்டபோது, அந்தப் பாறையின்பெயரை மாற்றுவேன் என்று சொல்லவில்லை. கலைஞரின் சாதுரியம் அங்கேதான் இருக்கிறது. அந்தப் பாறை இருக்கிற இடத்தில், வள்ளுவனுக்கு சிலை எழுப்பி, இது திருவள்ளுவனுக்குரிய இடம்; விவேகானந்தருக்குரிய இடம் இல்லை. இது ஆரியர்கள் பெருமைப்படும் பாறை அல்ல; திராவிடர்கள் பெருமைப்படும் – தமிழர்கள் பெருமைப்படும் இடம் என்று சாதித்துக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அதுதான் அவருடைய அரசியல் சாதுரியம்.

**சிம்சன் அருகே**
**பெரியாருக்கு சிலை ஏன்?**

‘மவுண்ட் ரோடு மகாவிஷ்ணு’ என்று ‘இந்து’ பத்திரிகை அழைப்பார்கள். இந்த அண்ணா சாலையில், ‘இந்து’ பத்திரிகை; பக்கத்தில் ‘திமெயில்’– இது எல்லாம் பார்ப்பன சமூகத்தவரின் இதழ்கள் என்பது நமக்குத் தெரியும். மறந்தும் திராவிட இயக்கங்களை அவர்கள் பாராட்டியதில்லை. பெரியாரையோ – பேரறிஞர் அண்ணாவையோ – கலைஞரையோ. ஒருநாளும் ஆதரவாக அவர்கள் பேசிய வரலாறு கிடையாது.

அப்படிப்பட்ட அந்த இடத்தில், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருக்கு சிலை எழுப்பி, இது பெரியாருடைய மண் – பெரியாருடைய மையம் என்று அந்த இடத்தில் சிலை எழுப்பியவர். இந்து பத்திரிகையை அங்கிருந்த அப்புறப்படுத்துவோம் என்று போராடவில்லை. அந்த இடத்தில் பெரியாருக்கு சிலை வைப்போம் என்,று சிம்சன் அருகே பெரியாருக்கு சிலை வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

நம்முடைய கொள்கைப் பகைவர்களை, அவர்எப்படிஎதிர்கொண்டார்? எப்படி அவர்களை வீழ்த்தினார்? கலைஞருக்கு நிகர் கலைஞர்தான். அதுதான் அவருடைய அரசியல்; அதுதான் அவருடைய கொள்கைப் பார்வை; கொள்கைத் தெளிவு.

**சேது சமுத்திரத் திட்டம்!**

ராமர் பாலம் என்று எல்லோரும் பேசியபோது, அவர் பெரியாருக்கே உள்ள நகைச்சுவை பாணியில் சொன்னார், ‘அந்த ராமர் பாலத்தை கட்டினார் என்பது உண்மை என்றால், அவர் எந்த பொறியியல் கல்லூரியில் படித்தார்’ என்று கேட்டார். இது யாரையும் காயப்படுத்துவதற்காக அல்ல, சிந்திப்பதற்காக. ராமர் இருந்தாரா? இல்லையா? என்பது அல்ல பிரச்சினை. அதை அவர் விமர்சிக்கவில்லை. தேர்தல் அரசியலில் இருந்தாலும் கூட, பகுத்தறிவோடு இயங்க வேண்டும். எத்தனை ஆயிரம் கோடி கொட்டப்பட்டு, அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது. அங்கே இராமர் கட்டிய பாலத்தை சேதப்படுத்தக் கூடாது என்ற ஒரு காரணம் சொல்லி, சேது கால்வாய் திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது. சோனியா காந்தி அம்மையாரை அழைத்து வந்து, அந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். ஆயிரம் கோடிக்கு மேல் செலவு செய்த பின்னர் அந்தத் திட்டம் நிறுத்தப்பட்ட போது, அதற்கு அவர்கள் சொன்ன காரணம், அந்தப் பாலத்தை ராமர் கட்டினார். அதனால் சேதப்படுத்தக் கூடாது என்று சொன்னபோது தான், தன்னுடைய எதிர்ப்பை இப்படி பதிவு செய்தார்.

முத்தமிழறிஞர் கலைஞருடைய அந்த சாதுரியம், இன்றைக்கு அவருடைய கருத்தியல் வாரிசாகவும் களத்தில் நிற்கிற அண்ணன் தளபதி ஸ்டாலின் அவர்களிடத்தில் வேறு வடிவங்களில் வெளிப்படுகிறது. கொஞ்சமும் சமரசம் செய்து கொள்ளாமல், அவர்களின் கைகளில் அமலாக்கத்துறை இருக்கிறது; அவர்களின் கைகளில் சி.பி.ஐ. இருக்கிறது; அவர்களின் கைகளில் வருமானவரித்துறை இருக்கிறது. அவற்றையெல்லாம் ஏவுவார்கள்; அவற்றைக்கொண்டு அச்சுறுத்துவார்கள்; கிடுக்கிப் பிடி போடுவார்கள்; நெருக்கடியைத் தருவார்கள். எனவே, நாம் சற்று நெளிந்து வளைந்து தான் செல்ல வேண்டும் என்று எண்ணவில்லை.

உன் அச்சுறுத்தலுக்கு ஒருபோதும் பணிய மாட்டோம் என்று வெளிப்படையாக சொல்லும் துணிச்சலை – நீ பணத்தை தராமல் நிறுத்தி வைத்தாலும், நாங்கள் அந்த மும்மொழிக் கொள்கைத் திட்டத்திற்கு உடன்பட மாட்டோம்; கையெழுத்திட மாட்டோம்; ஏற்றுக் கொள்ள மாட்டோம்; தேசிய கல்விக் கொள்கையை நாங்கள் ஏற்க மாட்டோம்.

எனதருமைத் தோழர்களே... அண்ணன் தளபதி அவர்களோடு ஏன் நாங்கள் கைகோர்த்து நிற்கிறோம் என்பதற்கு, இவருடைய கொள்கை உறுதிதான் என்பதைச் சொல்லி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தொல்.திருமாவளவன் எம்.பி. பேசினார்.



மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், சாத்தனூரில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு 150 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சீர்வரிசைகளை வழங்கி கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்தார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஹெச்.எஸ். பிரசாந்த், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.